21 JUL 2017

**துணை ஆணையர் (வவ), சரகம்-9 அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை . திருமதி.ஜெ.சத்யா,**
**இடம் - கிரீம்ஸ் சாலை, மூன்றாம் தளம், சென்னை-6**

ந.க. 1091/2017/ஆ2

நாள் - 07.07.2017

பொருள் : பொதுப்பணிகள் - வணிக வரித்துறை - துணை ஆணையர் (வவ), சரகம் 9, சென்னை 6 - தட்டச்சர் பணி - அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV - 2013-2014(ம)2014/2015 நேரடி நியமனம் செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணி வரன் முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1. செயலாளர் / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை 3,க.எண் 967/PSD-A/2016 நாள் 02.02.2016
2. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை 6 அவர்களின் நக எண் 791/2016/அ2-11 நாள் 03.03.2016
3. இணை ஆணையர் (வவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை 6 செயல்முறைகள் நக 1056/2016/அ2 நாள் 16.03.2016
4. அரசு ஆணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 22.07.2008
5. அரசு ஆணை எண் 43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 17.04.2009

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் பொது தேர்வாணையத்தால் தொகுதி IVல் 2013-2014(ம)2014-2015 ஆண்டிற்கான தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் இணை ஆணையர்(வவ) சென்னை(கிழக்கு)கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி கீழ்காணும் தட்டச்சர்களுக்கு பணியினை வணிகவரித்துறையில் அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தட்டச்சர் பணித்தரத்தில் பணிவரன்முறை செய்து அன்றைய தினம் முதல் தனியாளருக்கு தகுதிகான் பருவம் தொடங்குவதாகவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர்-திரு/ திருமதி | பதவி | அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் பணிவரன் முறை நாள் |
|---|---|---|---|---|
| 1. | ச.ரேகா | தட்டச்சர் | உதவி ஆணையர்(வவ) அலுவலகம் நந்தம்பாக்கம் வரிவிதிப்பு வட்டம் | 21.03.2016 முப |
| 2 | வ.மகேஸ்வரி | தட்டச்சர் | உதவி ஆணையர்(வவ) அலுவலகம் திருமுடிவாக்கம் வரிவிதிப்பு வட்டம் | 21.03.2016 முப |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வ.ராஜேஸ்வரி | தட்டச்சர் | உதவி ஆணையர்(வவ) அலுவலகம் குரோம்பேட்டை வரிவிதிப்பு வட்டம் | 31.03.2016 முப |

தனியாளாகளுக்கு் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவ காலம் தொடங்குகிறது என ஆணை வழங்கப்படுகிறது.

2) தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34(a) மற்றும் அதனுடன் கூடிய பிற்சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ளபடி, தட்டச்சர் தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலத்தினை “திருப்திகரமாக நிறைவு செய்ய” வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3) மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் சிறப்பு தேர்வு (Special test in the Tamil Nadu Government Office Manual) பார்வை 4 மற்றும் 5ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பெறும் தொழில் நுட்பத் தேர்வான “கணினிவழி அலுவலக தன்னியக்க முறை” (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுதல் வேண்டும். மேலும் தகுதி காண் பருவ காலத்தில் பணி “மன நிறைவு தரும்” வகையில் அமைதல் மிகவும் அவசியம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இந்த தகுதிகாண் பருவம் நிறைவு ஆணையானது, சென்னை/மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள தொகுதி-IV,2013-2014(ம)2014-2015 முடிய உள்ள பணிநியமனங்களுக்கான நீதி பேராணை மனுக்களின் மீதான இறுதி முடிவுக்குட்பட்டது.

ஒம்/-ஜெ.சத்யா,
துணை ஆணையர் (வவ),
சரகம் - 9, சென்னை - 6.

பெறுநர்

திருமதி. ச.ரேகா, வ.மகேஸ்வரி, வ.ராஜேஸ்வரி தட்டச்சர்கள்
உதவி ஆணையர் (வவ), நந்தம்பாக்கம் வரிவிதிப்பு வட்டம்
உதவி ஆணையர் (வவ), திருமுடிவாக்கம் வரிவிதிப்பு வட்டம்
உதவி ஆணையர் (வவ), குரோம்பேட்டை வரிவிதிப்பு வட்டம்
சென்னை

நகல் - தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை 6
2. இணை ஆணையர் (வவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை 6
3. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை 6

நகல் - பணியாளர் ஆணைக்கட்டு

உபரி 2

/உண்மைநகல்/

மேலாளர்

ஜிவி